# திண்டிவனத்தில் ஊரடங்கு நகரம் வெறிச்சோடியது



திண்டிவனத்தில் அரசு அறிவித்திருந்த முழு ஊரடங்கு உத்தரவால், எப்போதும் மக்கள் நெரிசலுடன் காணப்படும் நேரு வீதி வெறிச்சோடி காணப்பட்டது.

**திண்டிவனம், ஆக. 31–**

திண்டிவனத்தில் அரசு அறிவித்திருந்த முழு ஊரடங்கு உத்தரவால், நகரமே மக்கள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடியது.

கொரோனா நோய் பரவலை தடுக்கும் வகையில், கடந்த ஜூலை மாதத்திலிருந்து தொடர்ந்து இரண்டு மாதங்களாக தமிழக அரசால் ஞாயிற்றுக்கிழமை மட்டும் தளர்வில்லாத முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக நேற்றும் முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டது.

இதன் காரணமாக திண்டிவனத்தில் கடைகள், வணிக நிறுவனங்கள், டாஸ்மாக் கடைகள், பெட்ரோல் பங்க்குகள் என அனைத்தும் மூடப்பட்டிருந்ததால், மக்கள் நடமாட்டம் இல்லாமல் அனைத்து வீதிகளும் வெறிச்சோடி காணப்பட்டது.